# கிராமிய கலைக்கும் இலக்கணம் இருக்கு!

**கர்நாடக இசைக்கும் நாட்டுப்புற இசைக்கும் நாலாம் பொருத்தம் என்பார்கள்.** இந்த எதிரும் புதிருமாக இருக்கும் இரண்டு கலைஞர்களும் சேர்ந்து மார்கழி சீசனில் சென்னையில் பெரிய கச்சேரியே நடத்தியிருக்கிறார்கள். எப்படி சாத்தியம்? கர்நாடிக் இசைப் பாடகி சாருலதா மணியையும் கிராமிய இசைப் பாடகர் வேல்முருகனையும் சந்தித்தோம்.

'என்னைப் பொறுத்தவரைக்கும் நான் 'போல்ட்' ஆன ஆள். இசைத்துறையில் எங்க ஒரு புது விஷயம் நடந்தாலும் அங்க நான் முதல் ஆளா இருந்திருக்கேன். பண்டையக் காலத்துல இருந்தே தமிழ் இசை ரெண்டுவிதமா இருந்திருக்கிறது. கிராமிய இசை மனம் சார்ந்து வெளிப்பட்டதுனா கர்நாடிக் பக்தி சார்ந்து வெளிப்பட்டது. இந்த ரெண்டுமே முக்கியம்தான். அதுல இதான் பெருசு, அதான் பெருசுனு வித்தியாச பேதங்கள்லாம் எனக்குக் கிடையாது. இப்படி நான் பேசறதை சிலர் தப்பா புரிஞ்சுக்கலாம். அதப் பத்தி எனக்கு கவலையில்லை. எல்லாத்துக்கும் மேல கடவுள்னு ஒருத்தர் இருக்கார்." தொடங்கும் போதே அமர்க்களமாக ஆரம்பம் கொடுக்கிறார் சாருலதா மணி.

"இந்தக் கச்சேரி பத்தி நாங்க பிளான் பண்ணும்போதே விரசமா இல்லாத அளவுக்கு நாகரிகமான பாடல்களை மட்டுமே

> என் பாட்டையும் உற்சாகப் படுத்தினாங்க!





காட்ட முடியலைன்னாலும் 'இழைபோடின ராகம்'னு அதிலும் ராகம் இருக்கவே செய்கிறது. கர்நாடிக் மியூசிக்குக்கு ஏத்த மாதிரி வயலின், மிருதங்கம்னு பக்க வாத்தியங்களை பயன்படுத்தினோம். கிராமியப் பாடல்கள்னு வரும்போது நாதஸ்வரம், தவில் பயன்படுத்தினோம். இந்த இன்ஸ்ட்ருமெண்ட் வித்தியாசமே ரெண்டும் வேறவேற அடையாளத்தோடு இருப்பதை ஆடியன்ஸுக்கு புரிய வச்சுடும்!" என்று சொல்லும் சாருலதா பிளேபேக் சிங்கரும்கூட.

"சாதாரண கிராமியக் கலைஞனோடு ஒரு கர்நாடிக் பாடகர் சேர்ந்து ஒண்ணா பாடுறதே பெரிய விஷயம். அப்படியெல்லாம் நினைச்சதும் சபாவில் நடத்திவிட முடியாது.

எடுத்துக்கிட்டோம். கிராமியம்னாலும் அதற்கு இலக்கணம் இல்லனு எடுத்துக்க முடியாது. கிராமிய இசையில் 'செஞ்சுருட்டி'னு ஒரு மெட்டு இருக்கு. அத அடிப்படையா வச்சு உருவானதுதான் ஃபோல்க் சாங்ஸ். அப்புறம் கிராமியப் பாடல்களில் ராகம்னு தனியா இனம்பிரிச்சுக்

பல வருஷங்களாக ஒரு வழக்கம் இருந்துக்கிட்டு வருகிறது. அதுல ஒரு புதுசு செய்யணும்னு நினைச்சோம். அதற்கு பலரும் ஹெல்ப் பண்ணாங்க. அந்த உதவியால், அவர்களின் பெருந்தன்மையால் இந்தக் கச்சேரி சக்சஸ் ஆகியிருக்கிறது.

நான் கிராமியப் பாடகராக இருந்தாலும் எனக்கு கர்நாடக இசையில் நல்ல ஞானம் இருக்கு. முறையா சென்னை மியூசிக் காலேஜில் நான் கர்நாடிக் படிச்சிருக்கேன். அப்படி அடிப்படை ஞானம் இல்லாட்டி இவங்களோடு சேர்ந்து ஒரே மேடையில் கச்சேரி பண்றது சுலபமில்ல. அவங்க ஆலாபனை, சுரம் கலந்து பாடினா நான் நம்ம மண்ணின் கலைக்கு நியாயம் சேர்க்குறதைப்போல முறையா பாடினேன். அதனாலதான் வந்த ஆடியன்ஸும் கர்நாடிக் பாட்டை உற்சாகப்படுத்திய அளவுக்கு என் பாட்டையும் உற்சாகப்படுத்தினாங்க" என்று சந்தோஷம் கொள்கிறார் வேல்முருகன். கலைக்காக நல்ல மனங்கள் ஒன்று சேர்ந்தால் நல்ல விஷயம்தானே?!

-கடற்கரய்

படங்கள்: ஆர். சண்முகம்


